1977 ஆகஸ்ட் 6]

நியாய விலைக் கடைகள்.

*25 வினா—திரு. என். கிட்டப்பா

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :

மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ & ஆ) தமிழ் நாட்டின் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை அமைத்திட வேண்டும் என்ற கொள்கை அளவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதை அமல் நடத்தத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு விவரமான திட்டம் தயாரிக்கப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 17 ஆயிரம் ரெவின்யூ கிராமங்கள் இருப்பதாகவும், இவற்றில் எல்லாம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படப் போவதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இவற்றுக்கு எவ்வளவு மூலதனம் தேவை என் பதை ஆய்வு செய்து அறிந்து கொள்ளப் போவதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்விதம் ஆய்ந்து அறியும் போது எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் அதாவது இப்போது இல்லாத கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு தொடர்ந்து நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 16 ஆயிரம் கிராமங்களிலும் இந்த நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. இதுவரையிலும் 9,280 கடைகள் உள்ளன. மீதியுள்ள கடைகளைக் கிராமங்களில் எந்தவிதத்தில் எல்லாம் திறப்பது என்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம் : இன்னும் அதிகமான நியாயவிலைக் கடைகளைத் திறப்பதாக இந்த அரசு ஏற்கனவே கூறியிருக்கிறது. இப்போது இதைப்பற்றி பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். எல்லா இடங்களிலும்

இது போன்ற கடைகள் திறந்தால் விலைவாசி குறையும் என்பதை மனதில் வைத்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 9,280 கடைகள் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள கடைகளையும் சேர்த்து, அதாவது 16 ஆயிரம் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது நடந்து கொண்டிருக்கின்ற 9,280 கடைகளில், நகரப் புறங்களில் 2,333 கடைகளும், கிராமப்புறங்களில் 6,947 கடைகளும் நடைபெற்று வருகின்றன. மீதியுள்ள கடைகளைத் திறக்க வேண்டும் என்பது கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஆரம்பிக்கின்ற கடைகளை கூட்டுறவுத் துறையின் மூலம் ஆரம்பிப்பதா அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் ஆரம்பிப்பதா என்கின்ற விவரங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேனே தவிர திட்டத்தை கைவிட்டு விட்டதாகச் சொல்லவில்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி 10 ஆகிறது. பேரவையின் அனுமதியோடு இந்தக் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: சபாநாயகர் அவர்களே, 16,000 கிராமங்களுக்கு மேலும் 1,000 சொச்சம் கிராமங்கள் இருக்கின்றன என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொன்னதைப் பரிசீலித்து, கடைகள் திறக்கப்படும்போது அரிசி மட்டும் இல்லாமல், பல்வேறு பொருள்களையும் விநியோகம் செய்யப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்போது, இந்த ஹோல்சேல் டிரேடிங்கை, அதாவது மொத்த வியாபாரத்தை, அரசாங்கமே மேற்கொள்ளாமலும், கட்டாயக் கொள்முதலைச் செய்யாமலும் இருந்தால், அவர்கள் குறிப்பிட்டபடி பரவலாக

1977 ஆகஸ்ட் 6]

விநியோகம் செய்ய முடியாது. ஆகவே, இந்த மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளவும், கட்டாயக் கொள்முதலைச் செய்யவும் இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கக்கூடிய இந்தக் கடைகளில் அரிசி, கோதுமை, சீனி மாத்திரம்தான் கொடுக்கப்படுகிறது. மேற்கொண்டு, பருப்பு வகைகள், எண்ணெய், புளி, மிளகாய், போன்ற உணவுப் பொருட்களை அந்தக் கடைகளில் வழங்க அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் மற்ற விஷயங்களையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

திரு. எஸ். கணேசன்: எங்களுடைய பகுதியிலே கடைகளைத் திறப்பதாக இருந்தாலும், அரிசி கிலோ இரண்டு ரூபாய் நாற்பது பைசா இப்போது விற்கின்றது. குறிப்பாக, கிழக்குத் தஞ்சைப் பகுதிகளில், குற்றாலம், மாயவரம், செம்பனார்கோவில் பகுதியில் உடனடியாக இந்தக் கடைகளைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரிசி மாத்திரம் எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்பட வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்திடம் இருந்தது. அது அமுலில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது, சென்னை, கோயம்புத்தூர் போன்ற நகரப் பகுதிகளில் குடும்பக் கார்டுகளுக்கு அரிசி விநியோகம் செய்யப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், அரிசி நடமாட்டம் கட்டுப்பாடு இல்லாமல் எந்த மாவட்டத்திற்கும் செல்லலாம் என்றிருக்கிறது. ஆகவே, அரிசி தாராளமாகக் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. சே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அரிசி, கோதுமை, சர்க்கரை மட்டும் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தமிழ்நாடு சிவில் சப்ளை கடைகளில் பருப்பு முதற்கொண்டு சகலமும் வழங்கப்படுகிறது. கூட்டுறவுக் கடைகளில் வழங்கப்படுவது இந்த மூன்று ஐட்டம்தான். ஆனால், அங்கே மாத்திரம் எல்லாம் கொடுக்கிறார்களே என்று மக்கள்

மத்தியிலே குழப்பமான நிலைமை ஏற்படுகிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, எல்லாக் கடைகளிலும் எல்லாப் பொருள்களையும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகத்தான், அவற்றை எந்த முறையிலே கொடுக்க வேண்டுமென்று, அவை அமைய வேண்டுமென்று ஆலோசனை கேட்பதற்கு மாவட்ட ஆட்சியாளருக்குத் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. ராம. காியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, இது மக்களின் அன்றாடப் பிரச்சினை, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று நீண்ட நாட்களைக் கடத்தாமல், எத்தனை நாட்களுக்குள் முடித்து, மக்கள் இந்தப் பலனை அடைய முடியும் என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இது மக்களுடைய அன்றாடப் பிரச்சினை சம்பந்தப் பட்டது என்று சொன்னார்கள். ஆனால், இதிலே அரசாங்கத் தினுடைய பொருளாதாரப் பிரச்சினையும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர வேண்டும். ஆகவே, எந்த முறையில் சிக்கனமாக, எந்தப் பகுதிகளிலே நடத்தலாம், முழு அளவிலே மக்களுக்குப் பயன் தரும் என்பதை அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அரசு மிக அதிகமான அளவிலே நியாய விலைக் கடைகள் திறப்பதன் காரணமாக, அநியாய விலைக் கடைகள் இருப்பதாகத் தெரிகிறது. இது உண்மையா ? எனவே, அநியாய விலைக் கடைகளை நியாய விலைக் கடைகளாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் திறக்கப்படுகின்ற நியாய விலைக் கடைகளில், அந்தந்த கிராமங்களிலே உள்ள மக்கள் சென்று வாங்கினால், இருக்கும்படியான அநியாய விலைக் கடைகள் தாமாகவே மறைந்துவிடும்.

1977 ஆகஸ்ட் 6]

திரு. செ. பட்டாபிராமன் : ஒவ்வொரு ரெவின்யூ கிராமமும் அங்கிருக்கக்கூடிய ஜனத்தொகையைப்பொறுத்து மாறுபட்டிருக்கிறது. மிகச் சிறிய இருபது வீடுகள் கொண்ட ரெவின்யூ கிராமங்கள்கூட இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்தக் கிராமங்களிலே நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இருபது வீடுகள் ஜனத்தொகையுள்ள ரெவின்யூ கிராமங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால், உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. இராசமாணிக்கம் : அமைச்சர் அவர்கள் 9,270 கடைகள் திறக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தமட்டில் எந்தக் கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் தெரிவித்தது, கூட்டுறவு விவசாயக் கடன் வழங்கும் சங்கத்தைத் தெரிவிக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, 9,270 கடைகள் கிராமங்களிலே இருப்பதாக நான் சொல்லவில்லை. 6,947 கடைகள்தான் கிராமங்களிலே இருப்பதாக சொன்னேன். அந்தக் கடைகள் எல்லாம் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே திறக்கப்பட்டவை. இந்த அரசு புதிதாகக் கடைகள் திறக்கவில்லை. முந்திய அரசின் அறிக்கையை வைத்துதான் 6,947 கடைகள் நடைபெறுகின்றன என்று சொன்னேன். அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லை என்றால், முந்திய அரசு கொண்டு வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முந்திய அரசு எல்லா இடங்களிலும் அதைச் செய்யவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் மிகப் பொறுப்புணர்ச்சியோடு தெரிவிக்கிறார்கள்—அது வருத்தப்படக்கூடியதுதான். முந்திய அரசு இருந்த அன்றைக்கு இந்த நிலைமை இல்லை. இன்றைக்குப் பண்டங்களின் விலை ஏறுகிற நிலைமை சில இடங்களில் இருப்பதால் தேவை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் தேவைக்கு

[1977 ஆகஸ்ட் 6

இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் சொன்ன கடமையை எவ்வளவு வேகமாகச் செய்வார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நிதிநிலை அறிக்கையில் அல்ல—ஆளுநர் உரையில் சொல்லியபடி 16,000 கடைகள் மொத்தம் திறக்கப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். ஏற்கனவே, 9,280 கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள கடைகளைத் திறப்பதுதான் இந்த அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேள்வி எண் 26.

திரு. மு. அம்பிகாபதி: இது முக்கியமான கேள்வி.

திரு. சி. ஆறுமுகம்: கேள்வியின் முக்கியத்துவத்தைக் கருதி மேலும் துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். ஒரு நாளைக்கு இரண்டு கேள்விகள் வந்த நேரத்தில் திரு. கோதண்டராமன் அவர்கள் இரண்டு கேள்விகளை இவ்வளவு சீக்கிரம் முடித்துவிட வேண்டுமா என்று கேட்டார்கள். நான் ஒரு கேள்விக்கு பதினைந்து நிமிடங்கள் துணைக் கேள்விகள் எழுப்ப அனுமதித்தேன். இன்றைக்கு நிறையக் கேள்விகள் இருக்கின்றன. பிறகு முக்கியமான மானியத்தில் எல்லோரும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் துணைக் கேள்விகளைக் கேட்டு தெளிவான பதில்களை பெறுவதிலே நான் குறுக்கே நிற்கவில்லை.

திரு. துரைமுருகன்: சில கேள்விகளுக்குத் துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிக்க வேண்டும். உதாரணமாக, மனு நீதித் திட்டம் சம்பந்தப்பட்ட கேள்விக்கு சப்ளிமென்டரிஸ் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மனு நீதித் திட்டம் தொடர்ந்து அமல் நடத்தப்படுகிறதா?' என்பது கேள்வி. 'அது அமல் நடத்தப்படுகிறது' என்று பதில். அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதிலேயும் நான் மூன்று, நான்கு துணைக்

1977 ஆகஸ்ட் 6]

கேள்விகள் அனுமதித்தேன். துணைக் கேள்விகள் அனுமதிப்பதைப் பற்றிக் கவலை இல்லை. அதே நேரத்தில் விவாதத்தில் பேசும்போது பத்து நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். மணி அடித்தாலும் உட்காருவதில்லை, ஒத்துழைக்க மாட்டேன் என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை இருக்குமானல் சபையை எப்படி நடத்துவது?

திரு. துரைமுருகன்: நான் ஒரு சப்ளிமெண்டரி கேட்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியமான கேள்விகளுக்குத் தாராளமாகத் தருகிறேன்.

கல்குளம் வட்டத்தில் உணவு தானியங்கள் வழங்கல்.

*26. வினு—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா முழுவதுக்கும் அரசு கட்டாய ரேஷன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இரா. எட்மண்ட்: இப்பகுதிகளில் கட்டாய ரேஷன் வழங்க உத்தேசம் இல்லை. கன்னியாகுமரி மாவட்டம் தனித் தொகுதியாகப் பாவிக்கப்படுவதால், இம்மாவட்டம் முழுவதும் பொது விநியோக முறை விரிவாக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் வழங்கப்படும் அளவை விட எல்லையோர கல்குள வட்டப் பகுதியில் அதிக அளவில் அரிசி வழங்கப்படுகிறது. தனியார், மாவட்டத்திற்குள் சில்லரை வியாபாரம் செய்வதும் தடுக்கப்படவில்லை.

திரு.ஜே. ஜேம்ஸ்: விளவங்கோடு தாலுகா முழுவதும் ரேஷன் கொடுக்கப்படுகிறது. கல்குளம் தாலுகாவில் கல்குளத்தில் கொடுக்கப்பட்டாலும் அதைச்சுற்றியிருக்கும் சில பகுதிகளில் கொடுக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளிலும் அரிசி ரேஷன் கொடுக்கப்படுமா?